பதிவு எண். M. 6311 ★ தொலைபேசி : 51331 நிறுவியது : 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர் : இரா. செழியன் எம்.ஏ. எம்.பி

மலர் : 16] சென்னை : ஆனி 9 (22—6—68) சனி ★ வெளியூர் : ஆனி 10 (23—6—68) ஞாயிறு [இதழ் : 7

அஞ்சல் மடல் பஞ்சம் நீங்கும்

சென்னை, ஜூன் 22—

ஒரு இலட்சம் புதிய உள்நாட்டு அஞ்சல் மடல்கள் (இன்லாண்டு லெட்டர்) சென்னை அஞ்சல் துறைக்கு வந்து சேர்ந்துள்ளன. இவை சென்னை வட்டார அஞ்சலகங்கட்குப் பிரித்தளிக்கப்படும்.

இனி ஒவ்வொரு வாரமும், ஒரு இலட்சம் உள்நாட்டு அஞ்சல் மடல்கள் வந்து சேரும்.

ஏற்கனவே, வட்டார அதிகாரிகள் ஒரு கோடி வெற்று உள்நாட்டு மடல்களை (அஞ்சல் தலையின்றி) அச்சிட்டுக்கொண்டிருக்கின்றனர். அந்த மடல்களில் 2,5 இலட்சம்வரை இதுவரை வழங்கப்பட்டுள்ளது.

ஒருமைப்பாட்டுக்கு ஊறு விளையும்

மும்மொழித் திட்டம் ஏமாற்று வித்தையே!

தமிழகத்தின் கொள்கையே சாலச் சிறந்தது!

'இந்தி ஆதிக்கத்தைத் தென்னகம் என்றும் எதிர்த்தே தீரும்'-- ஒருமைப்பாட்டுக் குழுவில் அமைச்சர் செ. மாதவன் முழக்கம்

ஸ்ரீநகர், ஜூன் 21---

"மும்மொழித் திட்டம் வெறும் ஏமாற்று வித்தையாகும். அதில் அடங்கியுள்ளவையெல்லாம் ஐயப்பாட்டுக்குரியவையாகும்; அதனைச் செயல்படுத்துவதால் பயனேதும் விளையப்போவதில்லை"

என்று, தமிழகச் சட்டத் துறையமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள், ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் பேசுகையில் திட்டவட்டமாக அறிவித்தார். இங்கு நடைபெறும் ஒருமைப்பாட்டுக் குழுக் கூட்டத்தில் தமிழக அரசின் பிரதிநிதியாகக் கலந்துகொண்டுள்ள திரு. மாதவன் அவர்கள் மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"வடநாட்டுக்கும் தென்னாட்டுக்கும் பொது மொழி என்ற முறையில் ஆங்கிலம் ஒரு கட்டாய பாடமாகச் சேர்க்கப்பட்டுள்ளது. தமிழகத்தின் இரு மொழித் திட்டத்தை (ஆங்கிலமும் வட்டார மொழி அல்லது தாய் மொழி)ப் பின்பற்றுவதே சிறந்த வழியாகும்."

திரு. மாதவன் அவர்கள், வகுப்புவாதம் பற்றிக் குறிப்பிட்டதாவது : —

"மதத்தின் பேரால் ஏன் இரத்தம் சிந்தப்படுகிறது என்பதை எண்ணிப்பார்க்கத் தவறிவிட்டோம். 'இவற்றையெல்லாம் யாரோ தூண்டிவிடுகிறார்கள்' என்று குற்றஞ்சாட்டிக்கொண்டிருப்பதில் பயனல்லை; சிறுபான்மை வகுப்பினர்மீது உள்ள நம்பிக்கைக் குறைவே இவற்றிற்கெல்லாம் காரணம். சட்டமியற்றுவதாலோ தீர்மானம் நிறைவேற்றுவதாலோ நம்பிக்கையை ஏற்படுத்திவிட முடியாது"

இப்படிப்பட்ட முக்கிய விவாதங்களுக்கு முஸ்லீம் லீக்கைச் சேர்ந்தவர்கள் அழைக்கப்படாதது வருந்தத்தக்கது. சிறுபான்மை வகுப்பினரின் உள்ளுணர்ச்சியைப் புரிந்துகொள்ளாமல் ஒரு கட்சிமீது வீண் பழி சுமத்துவது கூடாது."

திரு. மாதவன் மொழிப் பிரச்சினை குறித்து மேலும் குறிப்பிட்டதாவது :—

"ஆங்கிலத்தின் இடத்தை உடனடியாக இந்தி பெற்றுவிடும் என்றால், பிறகு ஏன் பள்ளிகளிலும், கல்லூரிகளிலும் (மும்மொழித் திட்டப்படி) ஆங்கிலத்தைக் கற்பிக்க வேண்டும்?

"மகிழ்ச்சியூட்டக்கூடிய இசைக்காகவும், உணர்ச்சியூட்டக்கூடிய திரைப் படத்துக்காகவும் இந்தியை நாங்கள் விரும்புகிறோம்; தென்னாட்டில் ஆயிரக்கணக்கானவர்கள் இந்தியைக் கற்றுக்கொண்டு இந்திப் படங்களைப் பார்க்கிறார்கள்; ஆனால் இந்தியை, 'ஆட்சிமொழி' என்ற பெயரால் திணிக்க முற்பட்டால், [illegible] மூலம் நாட்டின் ஒருமைப்பாட்டுக்கே ஊறு விளையும்."

"மத்திய அரசுக்கும்— மாநில அரசுக்குமிடையேயுள்ள உறவு நிலை, முழுமையாக மறு ஆய்வு செய்யப்பட்டு, உண்மையான கூட்டாட்சி அமைப்புக்கு வழி செய்யப்பட்டாலன்றி, அரசியல் சட்டத்தைத் திருத்துவதால் எவ்விதப் பயனும் ஏற்படப் போவதில்லை. சிலர் கூறுவது போல், மதவாதங்களினால் வலிமை ஒன்றும் குறைந்துவிடவில்லை."

இந்தி பேசாத பகுதி மக்கள்மீது இந்தியைத் திணிப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்துப் பல்வேறு உறுப்பினர்களும் பேசினர்.

மும்மொழித் திட்டம் பற்றி திரு. சுகாதியா கருத்தறிவித்தபோது, மாறுபட்ட கருத்துக்கள் பரிமாறிக் கொள்ளப்பட்டன.

அமைச்சர் செ. மாதவன் ஆற்றிய உரையின் சில முக்கியப் பகுதிகள் இங்கு தரப்படுகின்றன :—

எரிச்சலூட்டினாலும் திரும்பமாட்டோம்!

"தி. மு. கழகம், இனி, பிரிவினையைக் கோராது; அக்கொள்கையை நாங்கள் கைவிட்டுவிட்டோம்; எவ்வளவுதான் எரிச்சலூட்டினாலும், அந்தக் கொள்கைக்கு நாங்கள் திரும்பமாட்டோம்.

எங்களை ஆழ்த்திவிட எவராலும் இயலாது!

'அரசியல் ரீதியாக நாங்கள் 'இந்திய'ராகவே இருக்க விரும்புகிறோம்; ஆனால், வேறு கலாச்சாரம் அல்லது மொழியில் எங்களை ஆழ்த்திவிட ஒப்பமாடடோம் -- சிறிதளவேனும் அதற்கு இடந்தர மாட்டோம்.

ஏமாற்று வித்தை-- இந்தி தேவையில்லை!

தென்னகம் இந்தியை எதிர்ப்ப[illegible] காரணத்தை விளக்கி அ[illegible] மாதவன் கூறியதாவது :—

"மு[illegible] திட்டம் என்பது ஒரு ஏமாற்று வித்தை; அந்தத் திட்டத்தின்கீழ் ஆங்கிலம் ஒரு கட்டாய மொழியாக இருக்கிறது; எனவே, மற்றொரு பொதுமொழியாக இந்தி தேவையே இல்லை.

நாங்கள் கோருவதற்கு இதுதான் காரணம்!

வடநாட்டு மாணவர்களைத் தென்னாட்டு மொழி ஒன்றைப் படிக்க வேண்டுமென்று கட்டாயப்படுத்துவதில் ஒரு பொருளுமில்லை; அதனால் அவர்களுக்கு எவ்விதப் பயனும் இல்லை.

ஆங்கிலமும், தாய்மொழியும் கொண்ட இரு மொழித் திட்டத்தை நாங்கள் கோருவதற்கு இதுதான் காரணம்.

திணிக்க முயலுவதால் எதிர்ப்பு எழுகிறது!

'மொழிப் பிரச்சினையைக் காலம் தீர்த்துக் கொள்ளட்டும்' என வருங்காலத் தலைமுறையினருக்கு விட்டுவிட வேண்டும். இயற்கையான வர்த்தக—கலாசார உறவு இதை நிர்ணயித்துவிடும். இந்தியைத் திணிக்க முயல்வதால்தான் அதற்கு எதிர்ப்பு எழுகிறது!

நியாயமிக்கக் கோரிக்கையை நிராகரிப்பதன் விளைவு அது!

ஒரு மாநிலத்துக்கு ஏதாவது ஒன்று வேண்டும் என்று கேட்பதை, 'வட்டாரப் பித்து' எனச் சொல்லுவதை நான் ஒப்புக்கொள்ளவில்லை. அந்தக் கோரிக்கை வன்முறையாக மாறுகையில்தான் அபாயமாகிவிடுகிறது!

அறிஞர் அறிவுரையை நினைவில் கொள்ளுவீர்!

'தேசிய ஒருமைப்பாட்டை, சுண்ணாம்பு-செங்கல்லால் கட்டிவிட முடியாது; மக்கள் மனதில் தானாக அது மலர வேண்டும்' என்று டாக்டர் இராதாகிருஷ்ணன் சொன்னதை நினைவிற்கொள்ள வேண்டும்."

'இந்தியைத் திணிக்க முற்படுவதால்தான் எதிர்ப்பு எழுகிறது' என்று அமைச்சர் மாதவன் சொன்னதை, திருமதி சந்திரசேகரும் ஒப்புக்கொண்டார்.

ஒற்றுமையிலும்--உறுதியிலும் உறுதியாக நிற்கிறது

மாநில உணர்ச்சிகள் பற்றி அமைச்சர் மாதவன் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"தமிழ்நாட்டின் மிக உயர்ந்த பண்புகளை நாங்கள் பெரிதும் போற்றுகிறோம்; என்றாலும், திராவிட முன்னேற்றக் கழகம், இந்தியாவின் ஒற்றுமையிலும் ஒருமைப்பாட்டிலும் உறுதியாக இருக்கிறது.

என்றாலும்; இந்திய சமூக அமைப்பில் உள்ள பல வேறுபாடுகளை ஒப்புக்கொள்ள வேண்டும்; ஒவ்வொரு மாநிலத்தைச் சேர்ந்த மக்களிடையேயும் நிலவுகின்ற தனித்தன்மைகளைக் கருத்தில் கொள்ள வேண்டும்; ஒற்றுமை என்பது, 'ஒரே மாதிரியாக இருப்பது அல்ல' என்பதை உணரவேண்டும்.

'இந்தியை ஏற்றுக்கொள்பவர்கள்தான் இந்தியர்கள்' என்று நிபந்தனை போடலாகாது!

அப்படிக் கூறுகையில் ஏன் இந்த நோக்கு?

'நான் இந்தியன்' என்று சொல்லும்போது அனைவரும் அதனை விரும்புகிறார்கள்; ஆனால்; 'நான் இந்தியை ஏற்கவில்லை' என்று கூறும்போது, சந்தேகக் கண்கொண்டு பார்க்கிறார்கள்!

இந்தியா பல மொழிகளைப் பேசுகின்ற---பல இன மக்களைக் கொண்ட நாடு; இந்த வேறுபாடுகளை ஒப்புக்கொள்வதன் மூலம்தான் ஒற்றுமையை வளர்க்க முடியுமே தவிர, வேறுபாடுகளை ஒழிக்க முயற்சிப்பதன் மூலம் ஒற்றுமையை வளர்க்க முடியாது!

கழகத்தின் குறிக்கோள்

இந்தியா ஓர் உண்மையான கூட்டாட்சியாக — மாநிலங்களுக்கு முழு அதிகாரம் வழங்கிய கூட்டாட்சியாக இருக்க வேண்டுமென தி. மு. கழகம் விரும்புகிறது.

'ஒரு மொழி' என்ற அளவில், இந்திமீது தென்னாட்டு மக்களுக்கு ஒரு வெறுப்பும் இல்லை; அதன் ஆதிக்கத்தையே நாங்கள் எதிர்க்கின்றோம்!

வியப்பாகஇருக்கிறதே!

தமிழ்நாட்டில் மற்ற இடங்களைப் போல் வகுப்புக் கலவரங்கள் இல்லை.

தமிழ்நாட்டில் முஸ்லிம் லீக், வகுப்பு ஒற்றுமைக்காகப் பாடுபடுகிறது; இந்நிலையில், ஒருமைப்பாட்டுக் குழுவிற்கு முஸ்லிம் லீகை அழைக்காதது வியப்பாக இருக்கிறது!"

புதுவையில் நகராட்சித் தேர்தல்

அக்டோபருக்குள் நடத்தஆணை

புதுவை, ஜூன் 22—

"புதுவை மாநிலத்திலுள்ள நகராட்சித் தேர்தல்கள், 1968 அக்டோபர் 24-ந் தேதியன்றோ அதற்கு முன்போ முடிவடைய வேண்டும்"

என்று, புதுவை அரசுக்கு குடியரசுத் தலைவர் தாக்கீது அனுப்பியுள்ளார்.

மத்திய அரசு ஆராயும் ஆலைகளின் விவரம்

புதுடில்லி, ஜூன் 21—

தமிழகத்தில் மூடப்பட்ட 6 ஆலைகளின் பிரச்சினையையும் ஆராய்வதற்காக மத்திய அரசு ஒரு குழுவை நியமித்துள்ளதல்லவா?

அந்த ஆலைகள் வருமாறு : —

கோவை சிரங்கவிலாஸ் ஜின்னிங் ஸ்பின்னிங் வீவிங் மில்; கோவை கிருஷ்ணவேணி டெக்ஸ்டைல்ஸ் மில்ஸ்; கோவை ராதிகா மில்ஸ்; கோவை முருகன் மில்ஸ்; செங்கோட்டை பலராம வர்மா டெக்ஸ் டைல்ஸ் லிமிடெட், பழனி முருகன் டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட்.

நம்நாடு

இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆனி 9 (22—6—68) சனி

தீ விபத்துக்களும் புதிய குடியிருப்புக்களும்

சென்ற கிழமையில், அதாவது பன்னிரண்டாம் நாள் வியாசர்பாடிப் பகுதியில் முதன்முதலாகத் தலைதூக்கிய பயங்கரமான தீ விபத்து, ஆறு நாட்கள் வரை மேலும் பல பகுதிகளில் நாசத்தை விளைவித்துள்ளன. இப்பரவலான தீ விபத்தின் காரணமாக, மொத்தத்தில் 2,800 குடிசைகள் நாசமடைந்துள்ளன. நாசமடைந்த இக்குடிசைகளில் வசித்துவந்த 16,000 மக்கள் குந்த இடமின்றி வேதனையில் ஆழ்ந்துகிடக்கின்றனர்.

இப்பரவலான தீ விபத்தின் விளைவாக, குடியிருந்துவந்த குடிசைகள் மட்டுந்தான் கருகிச் சாம்பலாகிவிட்டன என்பதில்லை; அக்குடிசைகளில் இடம்பெற்றிருந்த பொருள்கள் அனைத்தும், கொடுந் தீக்கு இரையாகியுள்ளன.

குடியிருந்த குடிசைகளையும் இழந்து, பலநாள் பாடுபட்டுச் சேமித்து வைத்திருந்த சிறிதளவு சொத்தையும் பறிகொடுத்ததுடன், மற்ற பொருட்களையும் இழந்து தவிக்கின்ற மக்களின் நெஞ்சம் படும் வேதனை எழுத்தினால் எழுதிக் காட்டக்கூடியதல்ல.

வெளியூர் பயணத்தை மேற்கொள்ளுகின்றபோது, பணத்தைப் பறிகொடுத்துவிட்டு—மறுவேளை உணவுக்குத் திண்டாடி—ஊர் திரும்ப வகையின்றிப் புகைவண்டி நிலையத்திலோ அல்லது பேருந்து நிலையத்திலோ கலங்கிய கண்களுடன் கதிகலங்கி நிற்கின்ற பரிதாப நிலையை அனுபவித்திருப்பவர்களால்தான், தீ விபத்துக்குள்ளான மக்களின் வேதனையை உள்ளது உள்ளவாறு உணர்ந்துகொள்ள முடியும்.

கோடை காலத்தில், சிறு தீப்பொறி பட்டாலும், குடிசைகள் பற்றிக் கொள்ளும். குடிசைக்குள் இருப்பவர்களின் அடுப்புகளிலிருந்து கிளம்பக்கூடிய தீயினால், சிற்சில சமயங்களில் குடிசைகள் தீப்பிடித்து எரிந்து சாம்பலாவதுண்டு பொதுவாக, அலட்சியத்தினாலும் முன்னெச்சரிக்கையாக நடந்துகொள்ளாததாலுமே தீ விபத்துக்கள் இயல்பாக நேரிடுவதுண்டு.

ஆனால், இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற தீ விபத்துக்கள், தற்செயலாக ஏற்பட்டதல்ல. தற்செயலாக ஏற்பட்ட தீ விபத்தாக இருந்திருக்கும்பட்சத்தில், ஒரு பகுதியில் எந்த நேரத்தில் குடிசைகள் எரிந்தனவோ அதேநேரத்தில் மற்றொரு பகுதியில் உள்ள குடிசைகள் எரிந்திடுவதற்கு நியாயமில்லை.

இப்படி எரிவதில் வியப்பில்லை என்பதானாலும், தொடர்ந்தாற்போல் முதல் தீ விபத்து எந்த நேரத்தில் ஏற்பட்டதோ அதே நேரத்தில் மற்ற தீ விபத்துக்கள் தொடர்ந்து ஏற்பட்டிருப்பது வியப்பளிக்கக்கூடியதேயாகும். இப்படி ஒரே நேரத்தில் தொடர்ந்து தீ விபத்துக்கள் ஏற்பட்டிருக்கின்ற காரணத்தால், இந்தத் தீ விபத்துக்கள் தற்செயலாக ஏற்பட்டிருக்க முடியாது -- இத் தீ விபத்துக்குள் பயங்கரமான சதி அடங்கியிருக்கிறது என்ற முடிவுக்கு வரவேண்டியதாக உள்ளது.

ஏற்பட்டிருக்கின்ற தீ விபத்துக்கள் பெரிதும், பட்டா நிலத்தில் அமைக்கப்பட்டிருக்கின்ற குடிசைப் பகுதிகளில் ஏற்பட்டிருக்கவில்லை. பற்றி எரிந்திருக்கின்ற குடிசைப் பகுதிகள் அனைத்தும், மாநகராட்சி மன்றத்துக்குச் சொந்தமான நிலப்பரப்பைச் சேர்ந்த பகுதிகளேயாகும். இந்தக் குறிப்பு, இந்தத் தீ விபத்துக்கள் எப்படி ஏற்பட்டிருக்க முடியும் என்ற ஆராய்ச்சியில் கருத்தைச் செலுத்தியிருக்கின்ற காவல் துறைக்கு, உண்மையைக் கண்டறிய பெருந் துணைபுரியும்.

இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற தீ விபத்துக்களின் மூலத்தை அறியும் நோக்கத்துடன் 364 பேர்களைக் காவல்துறை கைது செய்து விசாரித்துவருகிறது. முதல் தீ விபத்து ஏற்பட்டவுடனேயே, தொடர்ந்து தீ விபத்துக்குள்ளான மற்ற பகுதிகளைச் சேர்ந்த காவல் துறையின் கண்காணிப்புக்கு உள்ளாக்கப்பட்ட சமூக விரோதிகளை உடனடியாகக் கைது செய்து காவலில் வைத்திருக்கும்பட்சத்தில், ஒருவேளை, முதல் தீ விபத்தோடு நிலைமை கட்டுப்பட்டிருக்கக்கூடும்.

இப்பொழுது ஏற்பட்ட தீ விபத்துக்கான உண்மைக் காரணத்தைக் கண்டறிவது, இனி தீ விபத்துக்கள் ஏற்படாமல் தடுப்பதற்கு உதவும். இனி தீயினால் கருகிப் போகாத சிறுசிறு குடியிருப்புக்களை அமைப்பதன் மூலம்தான், தீ விபத்து என்ற பேச்சுக்கே இடமில்லாமல் செய்திட முடியும்.

சென்னை நகரத்திலிருக்கின்ற குடிசைப் பகுதிகள் அனைத்தையும் தீக்கு இரையாக முடியாத சிறுசிறு குடியிருப்புக்களாக அமைப்பதற்குப் பெருந்தொகை தேவைப்படும். இப்பெருந்தொகையை, மாநில அரசே செலவிடுவதென்பது இயலாத ஒன்று.

குடிசைப் பகுதிகள் அனைத்தையும் சிறு சிறு குடியிருப்புக்களைக்கொண்ட பகுதிகளாகப் புதுப்பித்துவிட வேண்டும் என்ற ஆசையும், நல்லெண்ணமும், இன்றையத் தமிழக அரசுக்கு நிரம்ப இருக்கிறது. மாநில அரசுக்கு இயல்பாக இருக்கின்ற ஆசையும் நல்லெண்ணமும் மட்டுமே இப்பணிக்குத் தேவைப்படக்கூடிய பெருந்தொகையைத் தேடிக் கொடுத்துவிடாது.

இந்திய அரசு கணிசமான தொகையை, குடிசைவாழ் மக்களின் குடியிருப்புக்களைத் தீப்பிடிக்காதவாறு அமைத்திடுவதற்காகக் கொடுத்துதவ வேண்டும்; அதுவும், காலந்தாழ்த்தாது உடனடியாகக் கொடுத்துதவ வேண்டும்.

இதுவுமன்றி, பணம் படைத்தவர்களும், வணிகர்களும், தொழிலதிபர்களும் தங்களுடைய சமுதாயக் கடமை எனக் கொண்டு இப்பணிக்குத் தாராளமாக நிதியுதவி செய்திடல் வேண்டும். தங்கள் மாளிகைகளைச் சுற்றியுள்ள குடிசைகள் தீயினால் பற்றி எரிகின்றபொழுது, தங்கள் மாளிகைகளை நாசத்திலிருந்து காப்பாற்ற எத்தகைய முயற்சி மேற்கொள்ள வேண்டியுள்ளது என்பதை அம் மாளிகை வாசிகள் நன்கு அறிவர். எனவே, தங்கள் மாளிகைக்குப் பாதுகாப்புத் தேடிக்கொள்ளும் பணி என முடிவு கட்டி, எரி நெருப்புக்கு இரையாகாத குடியிருப்புக்களை ஏழை மக்களுக்கு அமைத்துத் தர வேண்டும் என்ற தமிழக அரசின் நன்முயற்சிக்குப் பெருந்தொகையை நிதியாகத் தந்துதவ வேண்டுகிறோம்.

தீ விபத்துக்குள்ளான குடிசைப் பகுதிகளில் அமைக்கப்படவிருக்கின்ற குடியிருப்புக்கள், போக்குவரத்துக்கு வசதியுள்ள தெருக்களைக் கொண்டதாக அமைக்கப்படுதல் வேண்டும். இவ்வாறு அமைக்கப்பட்டில்லாததனாலேயே இப்பொழுது விபத்துக்குள்ளான குடிசைகளைப் பற்றிக்கொண்டிருந்த தீயை, தீயணைப்புப் படையினரால் அணைக்க முடியாமல் போய்விட்டது என்பது நல்ல படிப்பினையாகும். இப்படிப்பினையை மனத்தில் கொண்டு இனி குடியிருப்புக்கள் அமைக்கப்படல் வேண்டும்.

—கா. க.

ஆள் மாறினாலும் வண்டி ஒன்றுதான்!

மனுக்கள் வாங்குவதற்காக மட்டுமே இன்றைய அமைச்சர்கள் இல்லை

மக்கள் நலனைப் பற்றிய கவலை இன்றைய அரசுக்கு நிரம்ப உண்டு

தென்காசித் தொகுதியில் அமைச்சர் நெடுஞ்செழியன் விளக்கம்

செங்கோட்டை, ஜூன் 22—

"காங்கிரசுக்காரர்கள் எந்த வண்டியில் இருந்தார்களோ அதே வண்டியில்தான் நாங்களும் இருக்கிறோம்; ஆனால், வண்டி ஓட்டுபவரும் வண்டிக்குள் இருப்பவர்களும்தான் வேறு ஆட்கள்!

"ஆனால் அதே வண்டியில் உள்ள மாடுகளோ, தார்க்குச்சியோ, மூக்கணாங்கயிறோ மாற்றப்படவில்லை! அன்று இருந்த அரசின் அதிகாரிகள்தான் இன்றும் இருக்கிறார்கள்! நாங்கள்தான் மாறினோமே தவிர, அதிகாரிகள் மாறவில்லை!

"முன்பு அமைச்சர்களாக இருந்தவர்கள், காலை முதல் இரவு 12 மணிவரையில் மனுக்களை வாங்கும் வேலைகளைத்தான் செய்தார்களே தவிர, வேறு என்ன செய்தார்கள்?

"நாங்கள் அமைச்சர்களான பிறகு மக்களைப் பற்றித்தான் கவலையாக இருக்கிறோம்; நாற்காலி ஆசையோ, பதவிப் பைத்தியமோ எங்களுக்குச் சிறிதளவும் கிடையாது"

என்று கல்வியமைச்சர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், செங்கோட்டை வள்ளுவர் திடலில் தி. மு. க. சார்பில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகையில் சுட்டிக்காட்டி விளக்கினார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"1962-ம் ஆண்டுத் தேர்தலில் கதிரவனுக்குப் பேராதரவு இருந்தும், தோழமைக் கட்சியினருக்கு விட்டுக் கொடுத்து—பண்போடு தொடர்ந்து கழகத்தில் பணியாற்றியவர்.

'1967-ம் ஆண்டுத் தேர்தலில், பெயரும் புகழும் படைத்தவரும் செல்வாக்கு மிக்கவரும் அதிகாரம்—ஆதி[illegible]கம்—பணம் இத்தனை துணைகளுடனும் நின்ற ஒருவரிடம் கதிரவன், 'தோற்றார்' என்று கூறமுடியாது.

இருபது ஆண்டுக்காலம் காங்கிரசு ஏகபோக உரிமையாக இருந்து இன்று செத்துவிட்டது. காந்தி, நேரு போன்றவர்கள் வளர்த்த காங்கிரசு போய்விட்டது.

இன்று காங்கிரசில் பெரும் முதலாளிகள், பஸ் அதிபர்கள் கொள்ளை இலாபம் அடிப்பவர்கள் இருக்கிறார்கள்.

தென் சென்னைத் தேர்தலில் ஒரு பெரும் பணக்காரரை எதிர்த்து மாறன் ஒரு இலட்சத்து அறுபத்து ஐயாயிரம் ஓட்டு வித்தியாசத்தில் வெற்றிபெற்றார். ஆக, மக்கள் தமிழகமெங்கும் எங்களுக்கு ஆதரவாகத் தீர்ப்பு அளித்துவருகிறார்கள்."

வந்தவாசி நகருக்குச் செய்யாற்று நீர்

ரூ. 17.54 இலட்சம் செலவில் திட்டம்

வந்தவாசி, ஜூன் 22—

வந்தவாசி நகரத்தில் கோடை காலத்தில் குடிநீர்ப் பஞ்சம் ஏற்படுவது தெரிந்ததே.

இந்தப் பஞ்சத்தைத் தீர்க்க செய்யாற்றிலிருந்து தண்ணீர் கொண்டுவர ரூ 17 54 இலட்சம் செலவில் வேலை தீவிரமாகச் செய்யப்பட்டு வருகிறது.

தற்காலிகமாக நகரிலுள்ள குடிநீர்க் குளங்களை 16—6—68 முதல் நிரப்ப ஏற்பாடு செய்யப்பட்டிருக்

(3-ம் பக்கம் பார்க்க)

'தேசபக்தி'யின் சின்னத்திலும் கலப்படம்!

அதிகாரி எச்சரிக்கை

கோவை, ஜூன் 22—

'தாய்மையின் சின்னம்' என்று கருதப்படும் கதரிலும் கலப்படம் வந்துவிட்டது!

ஆலையில் தயாரிக்கப்பட்ட நூல் ரகம் ஒன்றை 'கதர் நூல்' என திருப்பூர், கோவை, மதுரை மார்க்கெட்டுகளில் விற்கப்படுவதாகச் சொல்லப்படுகிறது.

சில நபர்கள் இந்நூலை கதராடைத் தயாரிப்பில் தாராளமாகப் பயன்படுத்துகின்றனராம்.

கதர் நூலைப் போன்ற ரகம் ஒன்றை சில நூற்பு ஆலைகள் தயாரித்து வருவதாகவும், அந்நூல், 'கதர் நூல்' என மலிவான விலையில் விற்கப்படுகிறது எனவும் இராட்டை நூற்பாளர்கள் புகார் தெரிவித்துள்ளனர்.

இத்தகைய நூலை துணிக் கமிஷனரின் முன் அனுமதியின்றி நூற்பு ஆலைகள் தயாரிக்கக் கூடாதென ஏற்கனவே தடை விதிக்கப்பட்டிருக்கிறது.

துணிக் கமிஷனின் வட்டார அலுவலக அதிகாரி ம[illegible] நாயகம், தென்ன[illegible] ஆலை அதிபர்க[illegible]க்குச் சுற்றறிக்கை [illegible] அனுப்பியிருக்கிறார்.

முன் அனும[illegible] இந்நூலைத் தயாரிக்கும் நூற்பு ஆலை மீது இன்றியமையாப் பண்டங்கள் சட்டத்தின்கீழ் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்" என்று அவர் எச்சரித்திருக்கிறார்.

அனுபவசாலியின் அர்த்தமற்ற கேள்வி

சுப்பிரமணியத்தின் புலம்பலுக்குச் சூடான பதில்

பொள்ளாச்சியில் அமைச்சர் மாதவன் பேச்சு

பொள்ளாச்சி, ஜூன் 22—

'திட்டம் எங்கே -- திட்டம் எங்கே?' என்று தி. மு. கழகத்தினரைப் பார்த்துக் கேட்கும் சி. சுப்பிரமணியத்துக்குச் சூடான பதில் கொடுத்திருக்கிறார் அமைச்சர் மாதவன்—பொள்ளாச்சியில் நடந்த பொதுக்கூட்டத்தில்.

"எங்களைப் பார்த்துத் திட்டம் கேட்கும் சுப்பிரமணியம், பல ஆண்டுக்காலம் அமைச்சராக இருந்தவர்; அவருக்குத் தெரியாதா—'திட்டம் போடுபவர் யார்' என்று?

"ஐந்தாண்டுத் திட்டத்தை மாநில அரசா போடுகிறது? [illegible]டியே பார்த்தாலும், நாங்கள் ரூ. 100 கோடிக்குத் திட்டம் [illegible]ளோமே" என்றார் திரு. மாதவன்.

அமைச்சர் மாதவன் மேலும் பேசியதாவது:—

"உணவுப் பிரச்சினையைத் தீர்க்க விவசாயத்திற்கு ரூ 20 கோடிக்குத் திட்டம் கொடுத்தோம்.

இங்[illegible]மட்டும் தஞ்சை [illegible] மின்சார வளர்ச்சிக்காக 72 இலட்சம் ரூபாய்க்குத் திட்டம் போட்டுக் கொடுத்தோம்.

எந்தத் திட்டம் நாங்கள் போட வேண்டுமென்று சுப்பிரமணியம் விரும்புகிறார்?

திட்டத்தைப் பற்றி மொரார்ஜியிடம் கேட்பதுதானே! இதை விட்டு இங்கு ஏன் அவர் கேட்கிறார்?

சொத்துச் சேர்த்து விட்டார்கள்' என்று சுப்பிரமணியம் குற்றஞ்சாட்டுகிறார்! நாங்கள் எ[illegible]ங்கள் சொத்துக்களைக் காட்டுகிறோம்; சுப்பிரமணியமே நீதிபதியாக இருந்து இதைப்பார்க்கட்டும்; சட்டமன்றத்துக்கு வந்து பார்த்து, 'நாங்கள் சொத்துச் சேர்த்தோம்' என்பது மெய்ப்பிக்கப்பட்டால் இராஜிநாமா செய்துவிடத் தயாராக இருக்கிறோம். இதற்கு சுப்பிரமணியம் தயாரா?

வெறும் அரசியல் அநாகரிகத்தை வளர்க்க வேண்டாம் என்று அவருக்குக் கூறிக்கொள்கிறேன்."

மிதமிஞ்சிய நம்பிக்கையினல் ஏற்பட்ட விளைவு

உணர்ந்தபின் வருந்துகிருர் தலைமையமைச்சர்

ஸ்ரீநகர், ஜுன் 21—

திருத்தியமைக்கப்பட்ட தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவின் முதலாவது கூட்டத்தைத் துவக்கிவைத்துப் பேசுகையில் தலைமையமைச்சர் இந்திரா காந்தி,

"ஒருமைப்பாடு இல்லையேல் நாடு வாழ முடியாது"

என்று — நிலைமையை உணர்ந்த பின்—கூறியிருக்கிருர்; "நாட்டின் ஒற்றுமையைத் தகர்க்கப் பல 'தீய சச்தி'கள் அச்சுறுத்தி வருகின்றன" என்று குறிப்பிட்ட அவர், அது பற்றி மேலும் கூறியிருப்பதாவது:—

நடவடிக்கைத் திட்டம் உருவாக்கப்படுகிறதாம்

"நமது சமுதாய அரசியல் அடிப்படையையே தகர்த்துவிடக்கூடிய தீயசக்திகளை ஒழிப்பதற்கு உருப்படியான தேசிய நடவடிக்கைத் திட்டம் உருவாக்சப்பட்டு வருகிறது; எனினும், உடனடியாகச் சில நடவடிக்கைகளை எடுத்துக்கொள்ள வேண்டியது அவசியமாகும்.

ஒத்துழைப்பு—உதவியின் தேவையை உணருகிருர்

"தேசிய ஒருமைப்பாட்டை உருவாக்குவதில் அரசுக்கு முக்கியப் பொறுப்பு இருப்பினும், பிரச்சினையைத் தீர்ப்பதற்கு எல்லா மக்களின் ஒத்துழைப்பும் உதவியும் தேவையாகும்.

"இந்தியாமீது செஞ்சீன படையெடுத்தபோது, வெஞ்சினத்துடன் நம் மக்கள் ஒன்ருக இணைந்து திரண்டெழுந்தனர். அப்போது ஏற்பட்ட ஒற்றுமை, நமக்கு மிதமிஞ்சிய நம்பிக்கையைக் கொடுத்துவிட்டது! அதன் பயனுக, முன்னைய தேசிய ஒருமைப்பாட்டுக் குழு கலைக்கப்பட்டு விட்டது. இன்று திருத்தியமைக்கப்பட்டுள்ள இந்தக் குழு, நிரந்தரமாகவும் திறமையாகவும் பணியாற்றுமென நம்புகிறேன்.

அந்த ஆபத்து மீண்டும் தலைதூக்கியதற்குக் காரணம்?

"சுதந்தரம் கிடைத்து இருபது ஆண்டுகளுக்குப் பிறகு, நாட்டில் மீண்டும் பல இடங்களில், வகுப்புவாதம் தலைதூக்கியிருக்கிறது! நாட்டிற்கு ஆபத்தை விளைவிப்பது வகுப்புவாதமே! 'வகுப்புவாதப் பிரச்சினை தீர்ந்துவிட்டது' என்று எண்ணியிருந்த நேரத்தில், இந்த ஆபதது மீண்டும் ஏற்பட்டிருக்கிறது.

நிலவிய ஏற்றத் தாழ்வுகளை உணர்ந்து செயலாற்றினரா?

"சமூகத்தில் காணப்படும் ஆபத்து, எற்றத் தாழ்வுகளாகும். சட்ட ரீதியாக இந்த ஏற்றத் தாழ்வுகள் அகற்றப்பட்டுள்ளதென்ருலும், பின்தங்கியவர்கள், பழங்குடி மக்களின் விருப்பங்கள் நிறைவேறுவதற்கு வாய்ப்புகள் கிடைக்கவில்லை!

பாதுகாப்புடன் வாழும் நிலைமை இனிமேல்தானு?

"அரசியல் சட்டத்தில் கூறப்பட்டுள்ள இலட்சியங்களைப் பாதுகாப்பதற்காக நாம் போராட வேண்டும். நாட்டின் ஒரு பகுதியைச் சேர்ந்த மக்கள் மற்ருேர் பகுதியில் பாதுகாப்புடன் வாழக்கூடிய நிலைமையை நாம் உருவாக்க வேண்டும்.

"வகுப்பு அல்லது மத வேற்றுமைகள் நாட்டு மக்களின் அமைதி மிக்க வாழ்க்கைக்குக் குறுக்கே நிற்கக் கூடாது!

"நாட்டின் ஒருமைப்பாடு சக்திகள் மேலோங்கி நிற்கின்றன; ஆனுல், அவற்றை ஒன்று திரட்டி, அவற்றிற்கு வழிகாட்ட வேண்டியது அவசியமாகும்."

பேச்சு வேண்டாம்-செயல் புரிக!

ஒருமைப்பாட்டுக் குழுவால் ஒருமைப்பாடு ஏற்படுமா?

ஜெயப்பிரகாஷ் எழுப்பும் ஐயப்பாடு

ஸ்ரீநகர், ஜூன் 21—

"தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவினரால் நிறைவேற்றப்படும் முடிவுகளை மத்திய அரசு, மாநில அரசுகளும் நிறைவேற்றவேண்டும் என்று எதிர்பார்ப்பது முறையானதே; ஆனுல், சாதாரணமாக இது நடைபெறுவதில்லை.

"உதாரணமாக மும்மொழித் திட்டத்தை எடுத்துக் கொள்வோம்; இந்தி பேசும் மாநிலங்களில் இந்தத் திட்டத்தை அமுல் நடத்துவதற்கு ஊக்கமாக முயற்சி எடுத்துக்கொள்ளப்படவில்லை. காங்கிரசு ஆட்சிகளிலும் இந்த நிலைமைதான்!

"தேசிய ஒருமைப்பாடு சம்பந்தமாக அறிவாளிகள் அடங்கிய குழுக்கள் செய்துள்ள சிபாரிசுகளும் அமுல் நடத்தப்படவில்லை; ஆகவே, இப்போது முக்கியமாக வேண்டப்படுவது பேச்சு அல்ல — செயலேயாகும்"

என்று சர்வோதயத் தலைவர் திரு. ஜெயப்பிரகாஷ் நாராயணன் தலைமையமைச்சர் இந்திரா காந்திக்கு எழுதியுள்ள மடலில் குறிப்பிட்டிருக்கிருர்.

தேசிய ஒருமைப்பாட்டுக் குழுவுக்குத் தலைமையமைச்சர் நியமித்த ஐந்து உறுப்பினர்களில், ஜெயப் பிரகாஷ் நாராயணனும் ஒருவராவார்; ஆனுல், குழுக் கூட்டத்தில் அவர் கலந்துகொள்ளவில்லை.

அக்குழுவின் அமைப்பைப்பற்றியும், பயன்பற்றியும் குறிப்பிட்டுள்ள அவர், 'தற்போது அமைக்கப்பட்டுள்ள குழுவின்மூலம், நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்க இயலாது' என்ற விளக்கத்துடன் அம்மடலில் அவர் மேலும் எழுதியிருப்பதாவது:—

"இப்போது அமைக்கப்பட்டுள்ள தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, நாட்டில் ஏற்பட்டுள்ள நிலைமையைச் சமாளிக்க முடியாது; முதலாவதாக, இது ஒரு அதிகாரபூர்வமான குழு; சில தனிப்பட்டவர்கள் அதில் உறுப்பினர்களாக இருப்பதால், அதன் தன்மையை மாற்றிவிடவில்லை.

"அதிகாரபூர்வமான குழுவாக இருப்பதால், அதிகாரத்தில் இருப்பவர்களுக்குக் 'தாளம்' போடவேண்டியதைத் தவிர வேறு வழியில்லை!

"உதாரணமாக, இந்தியாமீது சீனர்கள் படையெடுத்தவுடன் பழைய தேசிய ஒருமைப்பாட்டுக் குழு, 'ஊறுகாய்ப் பானை'யில் போடப்பட்டது. படையெடுப்புக் காரணமாக நாட்டில் ஒருமைப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், ஆகவே ஒருமைப்பாட்டுக் குழுவிற்கு அவசியம் இல்லை என்றும் கூறப்பட்டது. இவ்வாறு செய்யப்பட்ட முடிவு விசித்திரமாக இருக்கிறது."

வேலை வாய்ப்பைப் பெருக்கும் வகையில் முதலீடு செய்க!

டாக்டர் லோகநாதன் ஆய்வுரை

புவனேசுவரம், ஜுன் 22—

"ஒருபுறம் வேலை வாய்ப்புக்கும்—முதலீட்டுக்கும் சமநிலை ஏற்படும் வகையிலும், மற்ருெரு புறம் வட்டார வளர்ச்சியும்—பொது வளர்ச்சியும் சமமான அளவில் அமையும்வகையிலும் நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தின வகுக்கும்போது திட்டம் தீட்டுவது அவசியமாகும்"

என்று பிரபல பொருளாதார நிபுணர் டாக்டர் பி. எஸ். லோகநாதன் கூறினுர்.

அவர் மேலும் குறிப்பிட்டிருப்[illegible]து:—

[illegible] வேலை வாய்ப்புக்களுக் [illegible] வழிமுறை, தொழி[illegible] செய்யும் அள[illegible] [illegible]ததாக இல்லை; [illegible] முதல[illegible] செய்யும் முறை [illegible] பொறுத்தே வேலை [illegible]ப்பு அமைந்துள்ளது.

[illegible]லீடு அதிகமானுல், அந்தப் [illegible] முதலீட்டை ஒப்புநோக்கும் அடிப்படையில் பார்க்கும் போது, வேலைவாய்ப்பின் விகிதம் குறைவாகவே இருக்கும்.

"அத்துடன், பெரிய அளவிலான தொழில்களில் முதலீடு செய்யப்பட்டால் அவற்றின்மூலம் குறைந்த அளவுக்கு வேலை வாய்ப்புக்கள் உண்டாகின்றன எனவே, வேலை வாய்ப்பினைப் பெருக்கும் வகையிலான மூலதன முறையே அமையவேண்டும்.

"நான்காவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனிப்பட்டோரின் பெருமளவு முதலீட்டின்மூலம் நிறுவப்படும் தனிப்பட்ட தொழிற்சாலை மூலம் தேவையான வேலை வாய்ப்பு ஏற்படும் என்று நான் கருதவில்லை."

கருத்தடை அறுவைச் சிகிச்சைக் கருவிகள்

சென்னை தொழிற்சாலையிலே[illegible] தயாரா[illegible]

புது[illegible]லி, ஜுன் 22—

கருத்தடை அறுவைச் சிகிச்சை செய்வதற்குத் தேவையான உயர்ந்த ரக கரு[illegible]களை சென்னை நந்தம்பாக்கத்திலுள்ள அறுவை[illegible] சிகிச்சைக் கருவிகள் தொழி[illegible] சாலையில் தயா[illegible] தார—குடும்பக் [illegible] அமைச்சகம் ஏற்ப[illegible] ளது.

"கருத்தடை அறுவைச் சிகிச்சைக் கருவிகள் சம்பந்தப்பட்ட வரையில் எல்லா மாநிலங்களின் தேவைகளையும், இந்தத் தொழிற்சாலை நிறைவு செய்யும்" என்று அந்த அமைச்சகம் விடுத்துள்ள அறிக்கை ஒன்று கூறுகிறது.

டெலிவிஷனில் உடலின் உட்கூறுகள்

வண்ணப் படமாகக் காட்ட இயந்திரம்

கை விரலின் உட்பகுதி, தசை அல்லது உடம்பின் உள்ளேயுள்ள ஓர் உறுப்பு இவற்றில் எதையும் டெலிவிஷன் திரையில் பல நிறங்களில் பார்ப்பதற்கு அமெரிக்காவில் ஒரு இயந்திரம் செய்துள்ளனர்.

விரலிலுள்ள இரத்த நாளங்கள் தெளிவாகத் தெரிகின்றன; டெலிவிஷன் திரையில் துடிக்கும் பச்சை, நீலம் அல்லது மஞ்சள் கோடுகளாக அவை காட்சியளிக்கின்றன.

செவிப் புலனுக்கு எட்டாத ஒலி (அல்ட்ரா சவுண்டு) புதிய பொறியில் பயன்படுத்தப்படுகிறது. உடம்பிலுள்ள எந்த உறுப்பின் தோற்றத்தையும் 'எக்ஸ்-ரே' படம் போல், டெலிவிஷன் திரையில் வர்ணங்களில் காட்டுகிறது—புதிய பொறி!

மருத்துவத் துறையில் நோய்க்கூறு அறிவதற்குப் புதிய இயந்திரம் பயன்படுமா என்று தற்போது சோதித்து வருகிருர்கள்.

சாதாரண எக்ஸ்-ரே பொறிகள் வழியாகப் பார்க்க முடியாத துடிக்கும் இரத்த நாளங்கள், தசை எலும்பு முதலிய உடல் உறுப்புக்களை அவை இயங்கும் போதே அது தெளிவாகக் காட்ட முடியும்.

சென்னிமலை வட்டாரத்துக்கு காவிரி நீர்

ரூ. 26 லட்சம் செலவில் திட்ட வேலைகள்

அமைச்சர் சாதிக் பாட்சா அறிவிப்பு

ஈரோடு, ஜுன் 22—

"ஈரோட்டிற்கு அடுத்த சென்னிமலைக்கும், அதனை அடுத்த 26 கிராமங்களுக்கும் குடிநீர் கொண்டுவரத் திட்டம் போட்டு அதற்காக ரூ. 26 இலட்சம் ஒதுக்கப்பட்டிருக்கிறது"

எனறு அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள், இங்கு கூட்டுறவு வெள்ளி விழாவில் பேசுகையில் தெரிவித்தார்.

16—8—68 அன்று சென்னிமலையில் நெசவாளர் கூட்டுறவுச் சங்க வெள்ளி விழா இந்தியத் துணைக் குடியரசுத் தலைவர் வி. வி. கிரி தலைமையில் நடைபெற்றது.

தமிழக நலத்துறை அமைச்சர் சாதிக் பாட்சா அவர்கள் வெள்ளி விழாக் கட்டிடத்திற்கு அடிக்கல் நாட்டினுர்; அப்போது அவா குறிப்பிட்டதாவது:—

"சென்னிமலை முதலிய 26 கிராமங்களுக்குக் காவிரி ஆற்றிலிருந்து குடிநீர் கொண்டுவரத் தமிழக அரசு திட்டம் தீட்டியிருக்கிறது; அதற்கான வேலைகளும் துரிதமாக நடைபெறுகின்றன.

கைத்தறிக்குக் கழக ஆதரவு

"கழகம், கைததறிக்குப் பல ஆண்டுகளாக — அதாவது, ஆட்சி பீடம் ஏறுவதற்கு முன்பிருந்தே ஆதரவு தந்து வந்திருக்கிறது. அந்த ஆதரவு இன்னும் தொடர்ந்து இருக்கும்."

விழாவில், தமிழ்நாடு நெசவாளர் கூட்டுறவுச் சங்கத் தலைவர் எம். பி நாச்சிமுத்து அவர்கட்குப் பொன்னுடை போர்த்தப்பட்டது.

(2-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

கிறது. இப்போது ஆஞ்சநேயர் குளம் நிரப்பப்பட்டுவிட்டது. நகரின் முக்கியக் குளமான பூமாலை செட்டி குளத்தையும் நிரப்ப ஏற்பாடு செய்யப்படுகிறது.

செய்யாற்று நீரை நகரின் குளத்திற்குக் கொண்டுவந்து நிரப்புவது இதுவே முதல் தடவை.

பேராசிரியர்

இலக்குவனுருக்கு பாராட்டு— வழியனுப்பு

டாக்டர் சி. இலக்குவனர் அவர்கள், கல்லூரிப் பேராசிரியர் நிலையிலிருந்து பல்கலைக் கழகத் தமிழ்த் துறைத் தலைவராய்த் தமிழக அரசின்மூலம் பரிந்துரைத்து, ஆந்திர மாநில உஸ்மானியப் பல்கலைக் கழகத்தில் பதவியேற்கச் செல்வதின் பொருட்டு 18—6—68-ல் செந்தமிழ்க் கவிஞர் எழுத்தாளர் பேரவையின் சார்பில் ஒரு பாராட்டு விருந்து நடைபெற்றது. திரு. காஞ்சி. மணிமொழியார் தலைமை வகித்தார். சிறுவை. மோகனசுந்தரன் அனைவரையும் வரவேற்று, டாக்டர் சி. இலக்குவனர் தமிழகத்தில் செய்த செந்தமிழ் வளர்ச்சித் தொண்டினைப் போல் ஆந்திர மாநிலத்திலும் பணியாற்றும்படிக் கேட்டுக் கொண்டார்.

தலைமைவகித்த காஞ்சி. மணிமொழியார், பேராசிரியரின் இலக்கியப் பணிகளையும், மொழி வளர்ச்சி குறித்து அவர் செய்த தியாகங்களையும், அவர் ஏற்ற துன்பங்களையும் சிறப்பித்துப் பாராட்டி, மலர்மாலை அணிவித்து வாழ்த்தினுர்.

அதனை அடுத்து, திருவாளர்கள் மாவித்துவான் மே. வீ. வேணு கோபாலர், ஆ. கி. பரந்தாமனுர் எம் ஏ, டெல்லி பல்கலைக் கழகப் பேராசிரியர் சாலை இளந்திரையன், சலகை ப. கண்ணன், ஏ. பி. சனுர்த்தனம் எம்.ஏ. எம்.எல்.சி., பி விருத்தாசலம், நாரண துரைக்கண்ணன், இலட்சுமிரதன் பாரதியார் எம் ஏ பி.எல்., செந்தில் ஆறுமும், பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு, கணேச கோபாலகிருஷ்ணன் ஆகியோர் டாக்டர் சி. இலக்குவனுர் அவர்களின் தமிழ்த் தொண்டுகளைப் பாராட்டி நல்வாழ்த்துக்களைத் தெரிவித்தார்கள்.

திரு. வணங்காமுடி நன்றி நவின்ருர்.

19—6—68 பிற்பகல் 1-35 மணிக்கு டாக்டர் சி. இலக்குவனுர், ஐதராபாத் விரைவு வண்டியில் பயணம் மேற்கொண்டார்கள்.

இரயிலடியில் அவருக்கு காஞ்சி. மணிமொழியார் கைத்தறி ஆடையும், ஆ. கி. பரந்தாமனுர், மோகன் ராஜ் ஆகியோர் மலர் மாலைகளும் அணிவித்தனர்.

கல்கத்தா வங்கத் தமிழர் சங்கச் சார்பில்—சங்கத் துணைச்செயலாளர் வீரபத்திரன் கைத்தறி ஆடை அணிவித்தார்.

சைவ சித்தாந்த நூற் பதிப்புக் கழகத்தினர் இனிப்புகள்—மலர்கள் தந்தும், தென்னிந்திய இரயில்வே தமிழ்ச் சங்கத்தார் மலர் மாலை இட்டும், திருமதி சிவகாமி சிதம்பரனுர் 'திருக்குறள்' நூல் தந்தும் வாழ்த்தினர்.

இரயிலடியில் 60-க்கும் மேற்பட்ட பல்துறை பேராசிரியர்களும், தமிழ் ஆசிரியர்கள் வாழ்த்தொலி செய்து வழியனுப்பினர். கைத்தறி ஆடைகளும், மலர் மாலைகளும் அவர் இருந்த பெட்டியின் முகப்பில் மலர் வளையங்கள் கட்டப்பெற்றன.

பொள்ளாச்சிக்கு மருத்துவமனை

பொள்ளாச்சி, ஜுன் 21—

"பொள்ளாச்சியில் ரூ. 18 இலட்சம் செலவில் மருத்துவமனை ஒன்று அமைக்கத் திட்டமிடப்பட்டிருக்கிறது; இந்த மருத்துவமனையில், 100 படுக்கைகள் இருக்கும்"

என்று, அமைச்சர் சாதிக் பாட்சா இங்கு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"இதற்காகும் தொகையில் ஒரு பகுதியைப் பொதுமக்களிடமிருந்து பெறுவதற்குக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது; இந்தக் குழுவில் மாவட்ட ஆட்சித் தலைவரும், மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் கண்ணப்பன், சண்முகசுந்தரம், இராமசாமி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பொள்ளாச்சி குடி தண்ணீர்ப் பிரச்சினைபற்றி அரசு தீவிரமாகப் பரிசிலனை செய்து வருகிறது."

நடக்க இருப்பவை

பொதுக்கூட்டங்கள்

23--6--68

வடக்குப்பொய்கைநல்லூர்

தி.மா.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு தி.மு.க. பணிமனை அருகில்; தலைவர்: சொ. முருகப்பா; பேசுவோர்: வெ கண்ணன், சு. நாவலர் நம்பி, இரா, கல்யாண சுந்தரம், அ. இராசமாணிக்கம், வை. இராமச்சந்திரன், இரா. பக்கிரிசாமி, க. விருத்தாசலம், ப.உ. செயபாலன், இரா. சிவானந்தம்.

24--6--68

ஒருவத்தூர்

தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு அழகிரி திடலில்; தலைவர்: சி.எஸ். செல்லப்பன்; பேசுவோர்: கேரளசுந்தரம், சி.வி. வேலப்பன் எம்.எல்.ஏ., எஸ்.கே. வடிவேலன் எம்.எல்.ஏ., பி. அருணகிரி, எஸ். வேலுச்சாமி.

தஞ்சாவூர்

13-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 7 மணிக்கு இராணி வாய்க்கால் தெருவில்; தலைவர்: என். சுப்பிரமணியம்; பேசுவோர்: தமிழரசி பி.ஏ., டி.கே. கோவிந்தன் எம்.சி., கு. சுல்தான் எம்.சி., டி.பி. சுப்பிரமணியம், ஆர். தியாகராசன்.

பைங்காநாடு

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு காளியம்மன் கோயில் எதிரில்; தலைவர்: ஆர்.எம்.கனேசன்; பேசுவோர்: வெ. கண்ணன்; சு. நாவலர்நம்பி, சு. நாராயணசாமி, கு. பாலகிருட்டினன், இரா. தென்னவன்.

25--6--68

ஒக்கநாடுகீழையூர்

தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு பொதுச்சாவடி அருகில்; தலைவர்: வி.எஸ். மணி; பேசுவோர்: வே.கண்ணன், எல். கணேசன் எம்.எல்.ஏ., நாவலர் நம்பி.

திருச்சி

17-வது வட்ட தி.மு.க. சார்பில் மாலை 6 மணிக்கு சானியான் குளத் தெருவில்; தலைவர்: சு. மனோகரன்; பேசுவோர்: கேரள சுந்தரம், எம் எஸ். மணி எம்.எல்.ஏ., ஆர். நாகசுந்தரம் எம்.எல்.ஏ., அ. நடராசன்.

மாணவியருக்குப் புத்தகம் வழங்கும்விழா

பாவேந்தர் நற்பணிக் கழகச் சார்பில் மாணவியருக்குப் புத்தகம் வழங்கும் விழா, 24—6—68 மாலை 3-30 மணிக்கு இராயபுரம் மன்னார் சாமிகோயில் தெரு, தூய அன்னுன் பெண்கள் உயர்நிலைப் பள்ளியில் நடைபெறும்; தலைவர்: க. அறிவழகன் எம்.எல்.சி.; புத்தகம் வழங்குபவர்: அமைச்சர் இரா. நெடுஞ்செழியன்; வாழ்த்துரை: இலக்குமி கிருட்டினமூர்த்தி, பேராசிரியர் க. த. திருநாவுக்கரசு, அரு. சங்கரலிங்கம்.

வெ. கண்ணன் நிகழ்ச்சிகள்

சூன் 23: வடக்கு பொய்கை நல்லூர்; 24: பைங்காநாடு; 25: கீழையூர்; 26: சக்கராப்பள்ளி; 27: மணல்குடி; 28, 29: தென்காசி; 30: சென்னை—இராயபுரம்.

கடலூரில் கலை நிகழ்ச்சி

கடலூர் 16, 18-வது வட்ட தி. மு. க. சார்பில், 23—6—68 மாலை 6-மணிக்கு திருப்பாப்புலியூர் வெள்ளிமேட்டான் தெருவில் கி. கோவிந்தராசன் தலைமையிலும்—இரெ. இளம்வழுதி எம்.எல்.ஏ. முன்னிலையிலும், மதுரை கண்ணம்மா—தங்கராசு குழுவினரின் கலை நிகழ்ச்சி நடைபெறும்.

அமைப்புச் செயலாளர்

என். வி. நடராசன்

தென்காசிப் பயணம்

சென்னை, சூன் 22—

கழக அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் தென்காசி இடைத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபடுவதற்காக இன்றிரவு இங்கிருந்து புறப்பட்டு மறுநாள் (சூன் 23-ம் நாள்) தென்காசி சென்றடைவார். தேர்தல் முடிவடையும்வரையில், பிரசாரப் பணிகளில் கலந்துகொள்வார்.

காயிதே மில்லத்

முஸ்லீம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில் அவர்கள் தென்காசித் தேர்தல் பிரசாரக் கூட்டங்களில் கலந்து கொள்வதற்காக இன்று இங்கிருந்து பயணமாகிருர்.

தென்காசி தொகுதிக்கு அமைச்சர் சத்தியவாணிமுத்து வருகை

செய்தித் துறை அமைச்சர் திரு மதி சத்தியவாணிமுத்து அவர்கள், சூன் 23-ஆம் நாள் தென்காசித் தொகுதியில் நிகழ்ச்சிகளில் கலந்துகொண்டுவிட்டு, மறுநாள் மாவட்டக் கலெக்டர் ஏற்பாடு செய்துள்ள நிகழ்ச்சிநிரலின்படி நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வார்.

சூன் 25-முதல் சூலை 1-ஆம் நாள் வரை தென்காசித் தொகுதியில் சுற்றுப்பயணம் செய்வார்.

பாவேந்தர்

பாரதிதாசன் விழா

முல்லைச்சரம் சுவைஞர் குழுச் சார்பில் பாவேந்தர் பாரதிதாசன் விழா; 23-6-68 மாலை 3-மணிக்கு சென்னை—மவுண்ட்ரோடு மகாசன சபையில்; கவிஞர் கொத்தமங்கலம் சுப்பு தலைமையில் பாட்டரங்கம்; 'பாவேந்தர்' என்ற தலைப்பில் பாடுவோர்: பொன்னிலன், பூதபாண்டியன், கல்லை ஆ. துரை, ஞா. மாணிக்கவாசகம், மு. சுந்தரமூர்த்தி, கா. வேழவேந்தன், கே சி. எஸ். அருணாசலம், சாலை இளந்திரையன், திருச்சி தியாகராசன், எஸ். டி. சுந்தரம்.

பன்மொழிப் புலவர் கா. அப்பாதுரையார் தலைமையில் சொற்பொழிவாற்றுவோர்: பேராசிரியர் இலக்குவனர், கே. பாலதண்டாயுதம், கி. வீரமணி, அகிலன், சிலம்பொலி செல்லப்பன், முகவை இராசமாணிக்கம், வசந்தா தண்டபாணி, மு. நாராயணன், முத்துக்குமாரசாமி, கா. பா. பட்டாபிராமன், சா. கணேசன் எம்.சி.

நீடாமங்கலத்தில் சிறப்புக் கூட்டம்

ஆலங்குடி சிதம்பரம் குடும்ப நிதிக்காக 24—6—68 காலை 10-மணிக்கு, நீடாமங்கலம் வெலிங்டன் தியேட்டரில் சிறப்புக் கூட்டம்; தலைவர்: மன்னை ப. நாராயணசாமி; பேசுவோர்: இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன், இரா. செழியன் எம்.பி., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ., ந. தர்மலிங்கம் எம்.எல்.ஏ., கோ. சி. மணி எம்.எல்.சி., கு. பாலகிருட்டினன், ந. சாமிநாதன்.

நன்கொடை: ரூ. 5; 2; 1.

வலங்கைமானில் எஸ். எஸ். ஆர். கலை நிகழ்ச்சி

ஆலங்குடி சிதம்பரம் குடும்ப நிதிக்காக இலட்சிய நடிகர் எஸ். எஸ். இராசேந்திரன் குழுவினரின் 'அன்னமும் அரசும்' என்ற வில்லுப் பாட்டுக் கலை நிகழ்ச்சி 24—6—68 மாலை 7-மணிக்கு வலங்கைமான் விக்டரி தியேட்டரில், மன்னை ப. நாராயணசாமி தலைமையிலும்—கோ. சி. மணி எம்.எல்.சி., ந. சோமசுந்தரம் எம்.எல்.ஏ. முன்னிலையிலும் நடைபெறும்.

நன்கொடை: ரூ. 10; 5; 2; 1.

இந்தியைத் திணிக்க எவருக்கும் உரிமையில்லை

வெறியர்களின் நிர்ப்பந்தத்துக்குப் பணிந்துவிட்டார் தலைமையமைச்சர்

நிர்வாகச் சீர்திருத்தக் குழுத் தலைவர் கே. அனுமந்தையா கூறுகிறர்

சென்னை, சூன் 22 —

"ஆட்சி மொழியாக ஆக்கும்பொருட்டு, 'இந்தியை உடனடியாகக் கற்றுக்கொள்ள வேண்டும்' என்று மக்களைக் கேட்பதற்கு அரசுக்கு எவ்வித உரிமையும் இல்லை! இது சம்பந்தமாக அரசியல் சட்டத்திலுள்ள பிரிவுகளைச் செயல்படுத்த மத்திய அரசு தவறிவிட்டது!

"உடனடியாகவோ அல்லது குறிப்பிட்ட காலவரம்புக்குள்ளோ இந்தியோ அல்லது வேறு எந்த மொழியோ ஆட்சி மொழியாக ஆக்கப்பட வேண்டும் என்று எந்த அரசும் வற்புறுத்துவது அறிவுக்குப் பொருத்தமற்றதாகும்"

என்று, நிர்வாகச் சீர்திருத்தக் குழுவின் தலைவர் கே. அனுமந்தையா கருத்துத் தெரிவித்தார்.

திருவல்லிக்கேணி கலாச்சாரக் கழகத்தின் ஆதரவில் நடைபெற்ற கூட்டத்தில் பேசுகையில் மேலும் அவர் குறிப்பிட்டிருப்பதாவது:—

"அரசியல் சட்டத்தின் பிரிவுகளை மதித்து அரசு அமுலாக்கியிருந்தால், இந்தியைக் கையாளுவதற்குப் போதிய திறமை வாய்ந்த புதிய தலைமுறை ஒன்று இதற்குள் தோன்றிவிட்டிருக்கும்.

"அறிவு முதிர்ச்சி பெருதவர்கள்தான், பத்தாண்டுக்காலத்தில் ஒரு மொழி வளர்ச்சி கண்டுவிட வேண்டுமென நினைப்பார்கள்.

"இந்தி பேசும் மாநிலங்களே கூட, தத்தம் மாநிலங்களில், இந்தியை ஆட்சிமொழியாகவோ, பயிற்று மொழியாகவோ உருவாவதற்கு ஏதும் செய்யவில்லை.

"ஆட்சி மொழிச் சட்டத்திற்கு, பின்னர் இழைக்கப்பட்டுள்ள அநீதியை நீக்கும் வகையில் சமரசத் திட்டம் ஒன்றை உருவாக்குவதற்காக எல்லாக் கருத்தினரையும் கொண்ட மாநாடு ஒன்றை உரிய நேரத்தில் தலைமையமைச்சர் கூட்டுவார் என நம்புகிறேன்.

"மொழிப் பிரச்சினையில் தீவிரவாதிகளின் நிர்ப்பந்தத்துக்குத் தலைமையமைச்சர் பணிந்து விட்டுக்கொடுத்துவிட்டார் என்றே நான் எண்ணுகிறேன்.

"இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதற்குள்ள ஒரே வழி, நேருவின் உறுதிமொழிகளை நிறை வேற்றிவைப்பதுதான்.

"மத்திய அரசில் ஆங்கிலத்துக்கும், இந்திக்கும் சமஇடம் தர வேண்டும். ஆங்கிலம் கால வரம்பின்றி நீடிக்கவேண்டும்.

"அரசு அலுவல்களுக்குப் பயன்படுத்துவதற்கு ஏற்றதோர் இணைக்கமுள்ள மொழியாக இந்தி இன்னும் வளர்ச்சிபெறவில்லை என்பதே என் கருத்தாகும்."

பிரச்சினைகளைத் தாங்களாகவே வரவழைத்துக் கொண்டனர்

தேசிய ஒருமைப்பாடு பற்றி திரு. கே. அனுமந்தையா குறிப்பிட்டதாவது:—

"ஒருமைப்பாடு சம்பந்தப்பட்ட பிரச்சினைகள், தாங்களாகவே வரவழைத்துக் கொண்டவை என்பதை, ஒருமைப்பாட்டு மாநாட்டைக் கூட்டியவர்கள் உணரவேண்டும்."

சென்னையில் நிர்வாகச் சீர்திருத்தக் குழு

முதலமைச்சர் அண்ணா, மற்றும் அமைச்சர்களுடன் விவாதம்

சென்னை, சூன் 22—

திரு. கே. அனுமந்தையா தலைமையிலான நிர்வாகச் சீர்திருத்தக் குழுவினர், நேற்று தமிழக அமைச்சர்களைச் சந்தித்து, இரண்டு மணி நேரத்துக்குமேல் கலந்துரையாடினர்.

மத்திய அரசுக்கும்—மாநில அரசுக்குமிடையில் உள்ள உறவு நிலை குறித்தே பெரும்பகுதி நேரம் பேசியதாகத் தெரிகிறது.

"மாநிலங்கட்கு நிதித்துறையில் அதிக அதிகாரம் தேவை" என்று முதலமைச்சர் அண்ணா வற்புறுத்தியதாகத் தெரிகிறது.

அண்ணா அவர்களுடன் அமைச்சர்கள் இரா. நெடுஞ்செழியன், மு. கருணாநிதி, கே. ஏ. மதியழகன் ஆகியோரும் விவாதத்தில் கலந்துகொண்டனர்

நிர்வாகச் சீர்திருத்தக் குழுவில் சென்ன பசவப்பா, எச். வி. காமத், முகர்ஜி ஆகியோர் உறுப்பினர்களாவர்.

தீ விபத்துத் துயர் துடைப்பு

1,00,000 ஓடுகள் நன்கொடை

சென்னை, சூன் 21—

சென்னையில் தீ விபத்தினுல் பாதிக்கப்பட்டவர்களுக்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து தருவதற்காக 'கிருஷ்ணு டைல்ஸ் அண்ட் பாட்டரி' நிறுவனத்தினர், ஓர் இலட்சம் கூரை ஓடுகளை நன்கொடையாக அளிக்க முன்வந்துள்ளனர்.

இந்த நன்கொடையை, சூலை [illegible]ம் நாள் கோயம்பேடு என்னு[illegible]கும் ஒரு நிகழ்ச்சி[illegible]ச்சர் அண்ணா அவர்[illegible]கொள்வார். கல்வி[illegible] நெடுஞ்செழியன், [illegible] துறை அமைச்சர் [illegible] ஆகியோரும் இந்[illegible] கலந்துகொள்வார்.

[illegible]டைப்பு நிதி

சென்னை நகரில் தீ விபத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுவதற்காகத் தமிழக முதலமைச்சர் திரட்டிவரும் நிதிக்கு சூன் 12-ம் நாள் வந்த தொகை ரூ. 878.00 ஆகும்.

இத்துடன் இந்நிதிக்கு மொத்தம் ரூ. 37,91,052 92 சேர்ந்துள்ளது

நிவாரணப் பணி

தீ விபத்தினுல் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உணவுப் பொட்டலங்கள் அளிக்கும் பணி வெள்ளியன்றும் தொடர்ந்து நடைபெற்றது.

அன்று பகல் மட்டும் 14 000 உணவுப் பொட்டலங்களை மாநகராட்சி வழங்கியது.

துறைமு[illegible]

'சீதக்காதி [illegible]

பேருந்துகளில் [illegible] —அமைச்சர் மு. கருணா[illegible] திறந்துவைக்கிறா[illegible]

சென்னை, சூன் 22—

சென்னைத் துறைமுகப் பகுதி, 'சீதக்காதி நகர்' என்று பெயர் மாற்றம் செய்யப்படுகிறது.

23—6—68 காலை 9-மணிக்கு சென்னை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தில் மறைந்த வள்ளல் சீதக்காதியின் பெயரை துறைமுகப் பகுதிக்குச் சூட்டும் விழா, மேயர் அபி்துல்லா பேக் தலைமையிலும்—மாநிலங்களவை உறுப்பினர் அப்துஸ் சமது முன்னிலையிலும் நடைபெறும்.

துறைமுகப் பகுதிக்குச் செல்லும் அரசாங்கப் பஸ்களில் பொதுப் பணித்துறை அமைச்சர் மு. கருணாநிதி அவர்கள், 'சீதக்காதி நகர்' என்ற பெயர்ப் பலகையைத் திறந்துவைப்பார்.

பணவிடைத்தாள் விலை 5 காசு

சென்னை, சூன் 22—

இந்த ஆண்டு சூலை முதல்நாளிலிருந்து, பணவிடை (மணியார்டர்) சட்டணத்தில் முன்தொகை மூன்று காசுக்குப் பதில் ஐந்து காசு வசூலித்து பணவிடைத் தாள்கள் விற்பனை செய்யப்படும்.

பணம் அனுப்பும்போது, கட்டணத்தில் இந்த ஐந்து காசு கழித்துக்கொள்ளப்படும்.

சூலை முதல்நாளுக்கு முன்னதாக மக்களுக்கு மூன்று காசு விலையில் விற்கப்பட்ட பணவிடை ('மணியார்டர்') தாள்களும் தொடர்ந்து ஏற்றுக்கொள்ளப்படும்; அந்தத் தாள்களில் பணம் அனுப்பும்போது, மூன்று காசு தான் குறைத்துக்கொள்ளப்படும்.

குழப்பம் ஏற்படுவதைத் தவிர்க்கவும், ஒரே சீரான கட்டண விகிதத்தைச் செயல்படுத்தவும் சூலை முதல் நாளுக்கு முன்னதாக மூன்று காசு வீதம் வாங்கப்பட்ட பணவிடைத் தாள்களை, சூலை மாதத்திலிருந்து மூன்று மாத காலத்திற்குள்—அதாவது, செப்டம்பர் மாத முடிவுக்குள் பயன்படுத்திக்கொள்ள வேண்டும் என்று கோரப்படுகிறது.

இந்த ஆண்டு செப்டம்பர் 30-ம் நாளுக்குப் பிறகு, மூன்று காசு வீதம் வாங்கப்பட்ட மணியார்டர் தாள்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டா.

பூந்தாழங்குடி வழக்கு

தமிழக அரசு உத்தரவு

சென்ற ஆண்டில் பூந்தாழங்குடியில் நடைபெற்ற கலவரத்தை[illegible]யொட்டி 110 பேர்மீது தொ[illegible]ட்ட கிரிமினல் வழக்கை, நிட[illegible]தனைகளுமின்றித் திரும்பப் பெறுமாறு தஞ்சை மாவட்டக் கலெக்டருக்கு அரசு உத்தரவிட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியீட்டாளராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சுப்பிரமணிய செட்டித் தெரு, சென்னை-13) அச்சிட்டு வெளியிடப்பட்டது.